புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# வேள்பாரியில் பழந்தமிழரின் புறத்திணை ஒழுக்கம்

திரு ஆ.கார்த்திக்
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி),
கோயம்புத்தூர் – 641 018

ஆய்வுச்சுருக்கம்

மானுட வாழ்க்கையில் சமூகம் என்பது அன்பு கொண்டும் நெஞ்சத்தால் ஈர்க்கப் பெற்றும் உள்ளத்தால் கலந்து களவு, கற்பு என்று இல்லறம் நிகழ்த்தி, மக்கட் செல்வங்களைப் பெற்று குடிகள் பெருகிய நிலையில், தனக்கென குடும்பத்தையும் நிலவுடைமை சமூகத்தையும் அரசுகளையும் வகுத்துக் கொண்டனர். இதனால் மானுடன் தன் வாழ்வியல் நிலையில் புறம் என்ற கோட்பாட்டை உள்வாங்கிக் கொண்டான். எனவே புற ஒழுகலாறுகளை வரையறுத்துச் சொல்வதற்காக நெறிமுறைகளை வகுத்துக் கொண்டான். அதில் வீரம் தலைமை பெற்றிருந்த காலத்தில் போரை மையமாகக் கொண்டே புற ஒழுகலாறுகள் வரையறுக்கப்பட்டன. 19-ஆம் நூற்றாண்டிற்குப் பின் மானுட சமூகம் போர் என்பதை விரும்பத்தகாத ஒன்று என்ற கருத்தியலைக் கொண்டாலும் போரை நிகழ்த்தாத நாடுகள் இல்லை என்றே கூறலாம். உலகம் தோன்றியது முதல் இன்று வரை போர்களுக்கான சுவடுகள் அளிக்கப்படாத ஒன்றாகவே உள்ளன. தங்களின் நிலத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கும், நிலப்பரப்பை அதிகப்படுத்துவதற்கும் மீமானுடத்தில் போர் என்ற கோட்பாடு முக்கியப் பங்கு வகித்தது. இத்தகைய சூழலின் பின்னணியில் இனக்குழுக்களாக மக்கள் வாழ்ந்த காலத்திலிருந்தே பண்டைத் தமிழர்கள் காலம்தோறும் பின்பற்றி வந்த போர் முறைகளையும், வாழ்க்கை நிலைகளையும், அறம், நிலையாமை, வாய்மை, வாகை, புகழ் போன்ற மனித இனச் செயல்பாடுகளைப் புறத்திணைகளாக எடுத்துக் கூறியவர்களுள் தொல்காப்பியரும், அய்யனாரிதனாரும் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

புறத்திணைகளை விளக்க முற்படும்போது தொல்காப்பியர் புறத்திணையில் ஏழாகவும், புறப்பொருள் வெண்பாமாலையில் அய்யனாரிதனார் பன்னிரண்டாகவும், சங்க காலப் புலவர்கள் புறநானூற்றில் உழிஞை தவிர பதினொன்றாகவும் குறிப்பிட்டுள்ளனர். மேலும் திணைக் கோட்பாட்டை எடுத்துரைக்கும் முயற்சியில் தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை, பன்னிருபாட்டியல், இறையனார் களவியல், நம்பியகப்பொருள், வீரசோழியம், முத்துவீரியம் போன்ற நூல்களும் தோன்றின. மேற்குறிப்பிட்ட நூலாசிரியர்கள் புறத்திணைகளை எடுத்துக் கூறியது மட்டுமல்லாமல் அதற்கான துறைகளையும் வகுத்துக் கூறியுள்ளனர். அய்யனாரிதனார் புறப்பொருள் வெண்பாமாலையில் வெட்சி முதலாகக் கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞ்சை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை. பெருந்திணை வரை புறத்திணைகளை வகுத்தும் அதற்கான துறைகளையும் விளக்கியுள்ளார். தொல்காப்பியர் கூறும் புறத்திணை இயலினை மையமாகக் கொண்டு அய்யனாரிதனாரால் எழுதப்பெற்ற புறப்பொருள் வெண்பாமாலையில் கூறப்பட்டிருக்கும் புறத்திணை ஒழுக்கங்களையும் சாகித்திய அகாதெமி விருது பெற்ற எழுத்தாளர் சு. வெங்கடேசன் அவர்களின் படைப்பில் உருவான வேள்பாரி என்னும் புதினத்தோடு ஒப்பிட்டுக் காண்பதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

முன்னுரை

பண்டைய சமூகம் என்பது தாய்வழி சமூகமாக இருந்த ஒன்றாகும். இச்சூழலில் பெண் என்பவள்தான் அதிகார மையமாக திகழ்ந்தாள். இக்காலகட்டத்தில் தோன்றியதுதான் கொற்றவை, துர்க்கை, அணங்கு, மற்றும் பல பெண் தெய்வங்களாகும். இந்த காலக்கட்டத்தில் ஆண் என்பவன் சார்பு என்ற ஒன்றையே சார்ந்திருந்தான். பின்பு காலச்சுழற்சியில் இந்த அமைப்பு முறை என்பது நிலம் சார்ந்து நகர்த்தப்பட்டது. அக்காலக்கட்டத்தில் நிலம் என்பது ஆண்வயமாக்கப்பட்ட ஒன்றாக இருந்தது. நிலம் என்பது அதிகாரமாகவும், உரிமையாகவும், உயிராகவும், பார்க்கப்பட்ட ஒன்றாகும். இதனை சார்ந்து நிலத்திற்கான விரிவாக்கம் என்பது முக்கிய தன்மை பெற்றது. இத்தகைய நில விரிவு தன்மையை அடிப்படையாகக் கொண்டு போர் என்றவொரு வாழ்வியல் முறை பரவலாக்கம் பெற்றது. பின்பு அப்போருக்குரிய வரையறைகள் வகுக்கப்பட்டன. பின்பு அவ்வரையறைகளுக்கான இலக்கணங்கள் இயற்றப்பட்டன. அவ்வாறு இயற்றப்பட்ட இலக்கணங்களே புறம் என்ற கட்டமைப்பிற்குள் தன்னை புகுத்திக்கொண்டது. அவ்வாறு புகுத்தப்பட்ட புறத்திணை இலக்கணங்கள் ஏழாக இருந்து, பின்பு பன்னிரண்டாகத் தன்னை விரிவுபடுத்திக்கொண்டது. அவை வெட்சி முதல் பெருந்திணை வரை என்று நீண்டது. இத்தகைய பரிணாம வளர்ச்சியில் வளர்த்துக்கொண்டும் வகுத்துக்கொண்டும், இலக்கணங்களிலும், இலக்கியங்களிலும் உலா வருகின்ற இப் புறத்திணை ஒழுக்கமானது இன்று அதிகளவில் வாசிப்பிற்கும், விமர்சனத்திற்கும் உட்படுத்தப்பட்ட வேள்பாரி என்ற புனைவு புதினத்தில் எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதைப் பற்றி ஆராயும் விதமாக இவ்வாய்வுக்கட்டுரை அமைகின்றது.

புறத்திணைகள்

தொல்காப்பியர் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்ற ஏழையும் புறத்திணைகளாகக் குறிப்பிடுகிறார். அதனை,
அதனை,

"அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்
புறத்திணை இலக்கணம் திறம்படக் கிளப்பின்
வெட்சி தானே குறிஞ்சியது புறனே" (தொல்.புறம் – 1006)

என்ற நூற்பா மூலம் குறிஞ்சித் திணையின் புறனாக வெட்சிணையையும்,

"வஞ்சி தானே முல்லையது புறனே" (தொல்.புறம் – 1011)

என்ற நூற்பாவில் முல்லைத் திணையின் புறனாக வஞ்சித் திணையையும்,

"உழிஞை தானே மருதத்துப் புறனே" (தொல்.புறம் – 1013)

என்ற நூற்பாவில் மருதத் திணையின் புறனாக உழிஞைத் திணையையும்,

"தும்பை தானே நெய்தலது புறனே" (தொல்.புறம் – 1017)

என்ற நூற்பாவில் நெய்தல் திணையின் புறனாகத் தும்பைத் திணையையும்,

"வாகை தானே பாலையது புறனே" (தொல்.புறம் – 1020)

என்ற நூற்பாவில் பாலைத்திணையின் புறனாக வாகைத் திணையையும்,

"காஞ்சி தானே பெருந்திணைப் புறனே" (தொல்.புறம் – 1023)

என்ற நூற்பாவில் பெருந்திணையின் புறனாகக் காஞ்சித் திணையையும்

"பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே" (தொல்.புறம் – 1025)

என்ற நூற்பாவில் கைக்கிளையின் புறனாகப் பாடாண் திணையையும் விளக்கும் பொழுது அகத்திணைக்குப் புறனாகப் புறத்திணைகளை எடுத்துரைப்பது தொல்காப்பியத்தில் புலனாகின்றது.

அய்யனாரிதனார் புறப்பொருள் வெண்பாமாலையில் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண் பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என புறத்திணைகள் பன்னிரண்டு என்பார். அவற்றை புறம், புறப்புறம், அகப்புறம் என்று மூன்றனுள் அடக்குவார். "வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பைத் திணைகளைப் புறம் என்றும், வாகை, பாடாண், பொதுவியல் திணைகளைப் புறப்புறம் என்றும், கைக்கிளை பெருந்தினை இரண்டையும் அகப்புறம்" என்ற பிரிவுக்குள் அடக்குவதாக திணைக்கோட்பாட்டு ஆராய்சியாளர்கள் கருதுகின்றனர்.

வீரசோழியம் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை ஆகிய ஏழு திணைகளும் புறத்திணைகள் என்றும், வாகை, பொதுவில், பாடாண் ஆகிய மூன்றும் புறப்புறத்திணைகள் என்றும், கைக்கிளை, பெருந்திணை முதலானவை அகப்புறத்திணை என்றும் இந்நூல் எடுத்துரைக்கின்றது.

இலக்கண விளக்கம் என்ற நூலானது தொல்காப்பியர் சுட்டிய ஏழு திணைகளையும் குறிப்பிட்டு கரந்தையை வெட்சியிலும், நொச்சியை உழிஞையிலும், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை முதலானவற்றைப் புறப்பொருள் ஒழிபாக காணுவது இந்நூல் மரபாகும்.

தொன்னூல் விளக்கம் என்ற நூலானது வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை என்ற ஏழையும் புறத்திணைகள் என்றும், முத்துவீரியம் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை முதலான எட்டையும் புறத்திணைகள் என்றும் எடுத்துரைக்கின்றது.

*வெட்சியும் கரந்தையும்*

பகைவர் நாட்டில் உள்ள பசுக்களைக் கவர்தல் வெட்சி எனும் திணையாகும். மனிதன் வேட்டையாடும் நிலையிலிருந்து வேளாண்மைத் துறைக்கு மாறிய போது ஒரு நாட்டில் உள்ள ஆநிரைகளே பெருஞ்செல்வமாகக் கருதப்பட்டன. இதனைத் தொல்காப்பியர்,

"வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் கள்வனின்
ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும்." (தொல்.புறம் - 1007)

என்ற நூற்பாவில் வெட்சித் திணையில் நடைபெறும் செயல்பாட்டினை விளக்குகிறார். இதில் வேந்தனால் அனுப்பப்பட்ட வீரர்கள் வேற்று நாட்டு எல்லைக்குள் புகுந்து அங்குள்ள ஆநிரைகளைக் கவர்ந்து வந்து தம்பால் பாதுகாத்து வைத்தலைக் குறிப்பிடுகிறார். இத்தகைய நிகழ்வினைப் போர் என்று குறிப்பிடாமல், போரின் தொடக்க நிகழ்வு என்றும், போரைத் தூண்டுவதற்கு மூல காரணமாக இருந்துள்ளது என்றும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். மேலும் தொல்காப்பியர் கரந்தை திணையைத் தனியொரு திணையாகக் குறிப்பிடாமல் வெட்சித்திணைக்குள்ளேயே அடக்குகிறார். ஆனால் அய்யனாரிதனார் புறப்பொருள் வெண்பாமாலையில் தனி ஒரு திணையாகவும் அதற்குத் துறைகளையும் வகுத்துள்ளார். வெட்சி வீரர்களால் கவர்ந்து செல்லப்பட்ட தன்னாட்டு ஆநிரைகளை மீட்கச் செல்வோர் கரந்தைப் பூவைச் சூடிச் சென்று மீட்பர். இதுவே கரந்தை என்று,

"மலைத்து எழுந்தோர் மரம் சாயத்
தலைக்கொண்ட நிரை பெயர்த்தன்று" (புறம்.வெண் - கரந்தைப் படலம்)

இவ்வரிகள் உணர்த்துகின்றது.

*வேள்பாரியில் வெட்சியும் கரந்தையும்*

சங்க இலக்கியத்தில் கபிலர் பாரி மன்னனின் புகழையும் அவனின் வீரத்தையும் பல பாடல்களில் பாடியுள்ளார். அவர் சொன்ன ஒரு சில குறிப்புகளை வைத்துக்கொண்டும் சில புனைவுகளைக் கலந்தும் சாகித்திய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர்களுள் ஒருவரான சு.வெங்கடேசன் அவர்கள் வேள்பாரி எனும் புதினத்தைப் படைத்துள்ளார். பறம்பு நாட்டில் தெய்வவாக்கு சொல்லும் ஒரு விலங்கினைக் கைப்பற்ற பாண்டியர்கள் தொடுத்த போர் தொல்காப்பியர் கூறிய புறத்திணைகளோடு ஒழுக்கத்தோடு ஒத்திருப்பதைப் புதினத்தின் வழி அறிய முடிகிறது.

குலசேகரப் பாண்டியனின் மகனான பொதிய வெற்பனுக்கும் கடல் வணிகத்தில் தலைசிறந்தவரான சூல்கடல் முதுவனின் மகள் பொற்சுவைக்கும் திருமணம் நிகழ்த்த மதுரையே மணவிழா பூண்டிருந்தது. அம்மணவிழாவிற்கு வெங்கல் நாட்டு மன்னன் மையூர்கிழாரும் மற்ற சிறுகுடி மன்னர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். வியப்பைத் தரக்கூடிய வகையில் ஏதாவது ஒன்றைத் திருமணப்பரிசாக வழங்கி பாண்டிய மன்னனின் அன்பைப் பெறலாம் என்று திட்டமிட்டு காமன் விளக்கை தயார் செய்துகொண்டிருந்த வேளையில் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. பறம்பு நாட்டின் செல்வமாகக் கருதப்படும் தெய்வவாக்கு(தேவாங்கு) விலங்கு வெள்ளத்தில் அடித்துவரப்பட்டது. இது என்ன விலங்கு என்று பலரும் யோசித்துக்கொண்டிருக்கும் சூழலில் மூன்றேர் உழவன் ஒருவன் மன்னரிடத்தில் கொண்டு சென்றான். மன்னருடன் அவையில் இருந்த பாணன் ஒருவன் "அது பறம்பு நாட்டின் செல்வம் என்றும் பாரி இதனை தெய்வமாகக் கருதி

தேவவாக்கு சொல்லும் விலங்காகவும் பார்த்து வருகிறான்" என்றும் கூறினான். இதனையே பரிசாக அளித்துவிடலாம் என்று முடிவு செய்து தன் மகன் இளமருதனிடம் மையூர்கிழார் கொடுத்து அனுப்பினார்.

கடல் வணிகத்தில் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காகவே சூல்கடல் முதுவனின் மகளை மணம் பேசி முடித்தனர். மதுரைக்குக் கொண்டு செல்லப்பட்ட தேவாங்கு விலங்கு அரண்மனையில் சக்கரவாகப் பறவைக்காக அமைக்கப்பட்ட மேடையில் வைத்திருப்பதைக் கண்ட அந்துவன் மிகவும் கோபமடைந்தான். பின்னர் அவ்விடம் நீக்கி பாண்டரங்கம் மேடையில் வைக்கப்பட்டது. அரண்மனை மணவிழாவிற்குத் தயாராகிக் கொண்டிருந்த நிலையில் அதனைத் திசைவேழர் சுற்றிப்பார்த்துக் கொண்டிருந்தார். அந்துவன் அந்நேரத்தில் கூண்டில் அடைக்கப்பட்ட தேவாங்கைச் சிறு குச்சி கொண்டு தொல்லை தந்தான். அதைக் கண்ட திசைவேழர் ஆச்சரியத்தில் மூழ்கினார். தேவாங்கு அச்சத்தில் பல இடங்களில் ஓடி அமர்ந்த போது அது வடதிசை நோக்கி அமர்வதைக் கண்டார். கூண்டை விட்டு வெளியே அனுப்பிய போதும் அது அங்கும் இங்கும் ஓடி அலைந்து மீண்டும் வடக்கு திசை நோக்கியே அமர்ந்தது. "திசை காட்டும் அதிசய விலங்கு" என்றும் அதனைக் கடல் வணிகத்தில் பயன்படுத்த முடிவு செய்து இச்செய்தியை மன்னரிடத்தில் திசைவேழர் எடுத்துக்கூறினார். தேவாங்களைக் கவர்வதற்குப் பறம்பு நாட்டின் மீது போர் தொடுக்க குலசேகரப் பாண்டியன் முடிவு செய்தான். பாண்டிய நாட்டுத் தளபதி கருங்கைவாணன் "பறம்பு நாட்டிற்குள் நுழைவதும் பாரியின் மீது போர் தொடுப்பதும் அவ்வளவு எளிதான காரியம் அல்ல" என்றும் தற்போது சோழர்கள் போர்தொடுத்து தோல்வியைத் தழுவியச் செய்தியை எடுத்துரைத்தான். பறம்பு நாட்டு வீரர்களுக்கு நிகரானவர்கள் திரையர் குலமே. அவர்கள் மிகவும் வலிமையானவர்கள். ஆனால் எண்ணிக்கையில் குறைவானவர்கள். இவர்களை முதலில் நாம் சிறைபிடிக்க வேண்டும். ஏனென்றால் பறம்பு நாட்டைப் பற்றி முழுமையாக அறிந்தவர்கள் அவர்களே. அவர்களின் வீரம் கடல் வணிகத்திற்குப் பெரிதும் பயன்படும் என்றும் தேவாங்கைக் கொண்டுவர அவர்களால் மட்டுமே முடியும் என்று உரைத்தான்.

திரையர்கள் சற்றும் எதிர்பார்க்காத நேரத்தில் அவர்கள் மீது போர் தொடுத்து திரையர்களின் தலைவனான காலம்பனையும் அக்குலம் முழுவதையும் கருங்கைவாணன் சிறை பிடித்தான். சிறைபிடிக்கப்பட்ட திரையர்கள் மதுரைக்குக் கொண்டுவரப்பட்டனர். கருங்கைவாணன் காலம்பனிடம் "உன்னுடைய குலம் விடுவிக்கப்பட வேண்டும் என்றால் பறம்பு நாட்டின் தெய்வவாக்கு சொல்லும் தேவாங்கு விலங்கைக் கவர்ந்து வர வேண்டும்" எனவும் உத்தரவிட்டான். தன் குலம் காப்பாற்றப் பட வேண்டும் என்பதற்காக வேறு வழியின்றி காலம்பன் தேவாங்கைக் கவர்ந்து வர முடிவு செய்தான். தேவாங்கைக் கவர்ந்து வரும் சூழலில் காலம்பனுக்கும் பாரிக்கும் மிப்பெரிய யுத்தமே நடந்துகொண்டிருந்தது. இருவரும் சண்டையிடும் போது, தன்னுடன் போர் புரிவது பாரி என அறிந்ததும் மிகவும் மனம் வருந்தினான். பாரியும் அதற்கு இணையாகப் பறம்பு நாட்டின் ஆதி குலம் திரையர்கள். அக்குலத்தின் தலைவனோடு போர் செய்தேனா? என வருந்தி அவனை தன் குலம் எனக் கட்டித் தழுவிக் காலம்பனைப் பாரி நண்பனாக ஏற்றுக்கொண்டான். இறுதியல் காலம்பனுக்கு 40க்கும் மேற்பட்ட தேவாங்குகளைக் கொடுத்தனுப்பியும் திரையர் வீரர்களுடன் நீலன் உள்பட சில பறம்பு வீரர்களை அனுப்பி திரையர் குலத்தையும் தேவாங்கையும் மீட்கப் பாரி துணையாக நின்றான். இதன் மூலம் தொல்காப்பியர் வகுத்த வெட்சி, கரந்தை முதலான புறத்திணை ஒழுக்கங்கள் புதினத்தில் இடம்பெறுவதைக் காணமுடிகிறது.

வஞ்சியும் காஞ்சியும்

அடங்காத மண்ணாசையால் ஒரு வேந்தனை மற்றொரு வேந்தன் அஞ்சுமாறு படையெடுத்துச் சென்று தன் ஆற்றலை வெளிப்படுத்துவதே வஞ்சித் திணை என்பதாகும். இதனை,

> வஞ்சி தானே... ... ....
> "எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்
> அஞ்சுதகக் தலைச்சென்று அடல்குறித் தன்றே" (தொல்.புறம்.-1011)

என்ற நூற்பா வஞ்சிப் பூச்சூடி பிற நாட்டு நிலப்பகுதிகளைக் கவர நடந்த பிரிதொரு போர் முறை இதுவாகும். 'மண்ணசை' என்றால் பிற மன்னர்களது நாட்டையோ அல்லது நிலத்தையோ கவர

ஆசைப்படுதலும் இதற்காகப் படையெடுத்து போகும் நிலை முதலானவற்றைக் குறிக்கின்றது. அங்ஙனம் வருவோரை எதிர்த்துத் தற்காப்பு போர் செய்வது காஞ்சி எனப்பட்டது. காஞ்சித் திணையைத் தொல்காப்பியர் வஞ்சித் திணைக்குள் அடக்கினாலும், அய்யனாரிதனார் புறப்பொருள் வெண்பாமாலையில் தனியொரு திணையாகக் குறிப்பிடுகிறார். அவ்வாறாக எடுத்துரைக்கும் போது காஞ்சி என்பது காஞ்சி மரத்தின் பூ. இப்பூவினைச்சூடிப் போர் புரிவதால் இது காஞ்சித்திணை எனவாயிற்று. 'வஞ்சியும் காஞ்சியும் தம்முள்மாறே' என்பது பன்னிருபடலம். இது வஞ்சித் திணைக்கு எதிரான போர்ச்செயல் குறித்து எடுத்துரைப்பதாகும். ஒரு மன்னன் தன்னுடைய பகைநாட்டின் மீது படை கொண்டு சென்று அதனைக் கைக்கொள்ள நேர்வதும் அங்ஙனம் பகைவேந்தன் படை கொண்டு வருதலை அறிந்த மன்னன் அவனுக்கு எதிராகவும், தன் நாட்டை பாதுகாக்கும் பொருட்டு போர் மேற்கொள்வதையும், அய்யனாரிதனார் புறப்பொருள் வெண்பாமாலையில்,

"காஞ்சி காஞ்சியதிர்வே தழிஞ்சி
பெரும்படை வழக்கொடு பெருங்காஞ் சியயே ..."(புறம்.வெண்.காஞ்சிப்படலம்)

என்ற நூற்பாவின் மூலம் காஞ்சித் திணையையும் காஞ்சித் திணையோடு சேர்த்து 21 துறைகளையும் குறிப்பிட்டுள்ளார்.

வேள்பாரியில் வஞ்சியும் காஞ்சியும்

புதினத்தில், பறம்பு நாட்டின் தெய்வ வாக்கு சொல்லும் விலங்குகளான தேவாங்கு விலங்குகளைக் கவரும் முயற்சியில் பாண்டியர்கள் மாபெரும் தோல்வியைத் தழுவினர். பாண்டிய நாட்டின் மிகப்பெரிய துறைமுகமான வைப்பூர் துறைமுகம் முழுவதும் எரிந்துபோனது. இதனால் பாண்டியனும் பாண்டிய நாட்டு தளபதியான கருங்கைவாணனும் பாரியின் மீது கடுஞ்சினம் கொண்டனர். சேரனின் அவையில் வைப்பூர் எரிந்த கதை பாடப்பட்டது. உதயஞ்சேரலின் கன்னங்கள் பூரிப்பில் சிவக்கும் அளவிற்கு வைப்பூரில் எரிந்த நெருப்பு சுகம் கொடுத்தது. பாணர்கள் போட்டி போட்டுக்கொண்டு நாள்தோறும் பாடல்களைப் பாடினர். "கூலங்கள் எரிவதைப்போலக் கலங்கள் எரிந்தன" என்றான் ஒருவன். "நீரிலே மூழ்கும் வேழத்தின் கருமை ஏறிய முதுகினைப் போலக் கருகிய நாவாயின் அடி மரங்கள் ஆற்றிலே புதைந்தன" என்றான் மற்றொருவன். "பாண்டியன் பதாகையில் பறந்து கொண்டிருந்த மீன்கள் எரிந்த நெருப்பின் சூடு தாங்காமல் ஆற்று நீரிலே செத்து மிதந்து கொண்டிருந்தன" என்றான் இன்னொருவன். கடைசியாக ஒரு பாணன் "பாண்டியன் இனி சுட்டப்பட்ட மீன்" என்று பாடி முடித்தான்.

இவ்வாறாக ஒரு பக்கம் பாண்டியனுக்கு ஏற்பட்ட இழப்பைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தாலும் பாரியை வீழ்த்த வேண்டும் என்றும் பறம்பு மலையை முழுவதுமாக எரிக்க வேண்டும் என்றும் முடிவு செய்து மூவேந்தர்களும் ஒன்றிணைந்து போர் தொடுக்க முடிவு செய்து 40 ஆயிரம் படை வீரர்களுடன் ஆதிமலை வழியாகப் பறம்பு நாட்டை முற்றுகையிட்டனர். வேந்தர் படையின் செயல்பாடுகளை மலையின் உச்சியில் இருந்து பார்வையிட்டுக் கொண்டிருந்த நிலையில் பாரி, தேக்கன், முடியன், காலம்பன் முதலானோர் ஆலோசனையிட்டனர்.

பறம்பு நாட்டில் போர் என்பது கொற்றவையின் திருவிழா. "ஆதிகாலம் தொட்டு அவள் மனம் குளிரும் நிலம் போர்க்களம்தான். சிதைவுண்ட உடல்களும் சரிந்து தொங்கும் குடல்களும் தாடை வெட்டுப்பட்டு பிளந்து கிடக்கும் முகங்களும்தான் அவளுக்கான படையல்" என்று கொற்றவை விழா தொடங்கியது. தேவாங்கின் ஓசை வழக்கத்திற்கு மாறாகக் கேட்டது. பாரியின் மனைவியான ஆதினியின் வெறியாட்டம் தொடங்கியது. குலநாகினிகள் அடக்க முயன்றும் ஆதனியின் வெறியாட்டத்தை அடக்க முடியவில்லை. நீர்ச் சேவலின் தலையை திருகி இடப்புறமும் உடலை வலப்புறமும் வீசி எறிந்தாள். குலவையோடு தேவாங்கின் ஒலியும் இணைந்து பேரொலியாய் காட்டையே உலுக்கின. எதிரிகளை மலைமலையாக கொன்றழிப்போம் என்று ஆதனி அணங்கு ஆட்டம் போட்டாள்.

மேடையில் அமர்ந்திருந்த சூல்வயிற்றுக்காரி "வா... ஏங்கிட்ட வா..." என பேய்க் கூச்சலிட்டாள். "விழப்போகும் எதிரிகளின் எண்ணிலடங்காத உடல்களைத் தின்று முடித்துவிட்டு வருகிறேன். உருவிய குடல்களால் குன்றுகள் மறைந்து கிடக்க, குருதியைக் குடித்துவிட்டு வருகிறேன். அதற்குள் ஏன் அழைக்கிறாய்" என கொற்றவை வடிவாக நின்ற ஆதினி கத்தினாள். ஆனால் சூல்வயிற்றுக்காரி விடவில்லை. அதைவிட பெருங் குரலெடுத்து "காலம் தாழ்த்தாதே

எனக்கான வாக்கை அளித்துவிட்டு நீ போ" என்று கத்தினாள். ஆதியின் மீது கொற்றவை முழுமையாக இறங்கினாள். கொற்றவையின் வாக்காக தேவாங்கு விலங்கு ஒலியெழுப்பி போருக்கு உத்தரவு தந்தது. ஆந்தைகளின் வட்ட விழி ஒடுக்குற்ற அந்த கணத்தில் இருளும் மலையும் ஒருசேர உணரும்படி காடதிர "கொற்றவையின் பசி தீர்க்க எதிரிகளின் பிணங்களை மலையெனக் குவிப்போம்! பறம்பெங்கும் வேந்தர் படை சிந்தும் குருதியை விட்டு ஈக்கள் அகலாது நிலை கொள்ளட்டும். சேரனின் படையை அழித்தொழிக்கும் வேலையைத் தேக்கனும் கூழையனும் உதிரனும் செய்யட்டும். கிழக்கு திசையில் நிலைகொள்ளும் பாண்டியனைக் கருவறுக்கும் வேலையை முடியனும் காலம்பனும் செய்யட்டும். எழுவனாற்றின் மணலுக்குள் சோழப் படையைப் புதைத்தொழிக்க நான் புறப்படுகிறேன். கொற்றவையின் பெரும் பசிக்கு திசையெங்கும் விருந்தளிப்போம்" என்று பாரி கத்தினான். இதன் மூலமாக மண்ணாசையினால் பகைவர் நாட்டின் மீது போர்த் தொடுக்க நிகழும் வஞ்சித் திணை தொடர்பான ஒழுக்கங்களும், நாட்டைக் காக்கும் பொருட்டு போர் தொடுக்கும் வேந்தன் மீது எதிர்த்தாக்குதல் நிகழ்த்தும் காஞ்சித்திணை தொடர்பான ஒழுக்கங்களும் இப்புதினத்தில் புனைவாக அழகுடன் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

நொச்சியும் உழிஞையும்

பகையரசனால் முற்றுகையிடப்பட்ட மதிலை, மதிலுக்குரிய அரசன் உள்ளிருந்தே வெளியே இருக்கும் பகைவரோடு போரிட்டு அம்மதிலைக் காப்பதாகும். மதிலைப் பாதுகாப்பதற்காக நடைபெறும் போரை நொச்சித்திணை என்பர். இதனை புறப்பொருள் வெண்பாமாலையில் அய்யனாரிதனார்,

"ஏப்புழை ஞாயில் ஏந்துநிலை அரணம்
காப்போர் சூடிய பூம்புகழ்ந் தன்று" (புற.வெண் - நொச்சிப் படலம்)

என்ற வரிகளில் ஏவறையை உடைய முடக்குளைத் தாங்கின நிலைமையினை உடைய எயிலைக் காக்கும் வீரர் சூடிக்கொண்ட நொச்சிப்பூவினது சிறப்பினைப் புகழ்வது நொச்சித் திணை ஆகும். 'எயில் காத்தல்' நொச்சித் திணை என்பது கருத்து. தொல்காப்பியர் இதனை உழிஞையில் சேர்ந்ததாகவே கொள்வார்.

"முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்
அனைநெறி மரபிற்று ஆகும் என்ப" (தொல்.புறம் - 1013)

என்பது அவரது சூத்திரம். உழிஞையும் நொச்சியும் தம்முள் மாறே (பன்னிரு படலம்) என்ற வரியையொட்டி நொச்சித்திணையை அய்யனாரிதனார் வகுத்துள்ளார். வெட்சியில் கூறப்பட்ட 'புறத்துறை' என்பது காட்டரணைப் பகைவர் வளைத்துக்கொள்வதாகும். இதுவோ பாதுகாப்பிற்குரிய நுட்பமான ஏற்பாடுகள் பலவற்றையும் உடைத்தாயிருக்கும், மலையும் காடும் நீருமல்லாத அகநாட்டுள் அமைந்த அருமதிலினை உழிஞையார் முற்றியிருப்ப, அதனைக் காத்து நிற்கும் தன்மையை உரைப்பது நொச்சித் திணையாகும். இதனால் உழிஞைதிணை என்பது கோட்டை மதில் காக்கும் போராகவே வருணிக்கப்படுகிறது. இவ்விருவரும் கடும் போர் புரிவர் இதில் யார் வெல்வர் என்று கூற முடியாது என்பதனை,

"அகத்தோன் வீழ்ந்த நொச்சியும் மற்றதன்
புறத்தோன் வீழ்ந்த பதுமை யானும்" (தொல்.புறம் - 1016)

என்ற வரிகளில் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

வேள்பாரியில் நொச்சியும் உழிஞையும்

புதினத்தில் நாற்புறமும் வேந்தர் படைகள், பறம்பு நாட்டைச் சுற்றி நிலை கொண்டிருந்தன. பாரி, தேக்கன், வாரிக்கையான், காலம்பன் முதலானோர் வேந்தர் படையின் செயல்பாடுகளைக் கண்காணித்தபடி இருந்தனர். இதற்கிடையில் பாண்டிய நாட்டுத் தளபதியான கருங்கைவாணன் மூன்று சேனைகளைக் கொண்ட 600 படை வீரர்களுடன் வேட்டுவன் பாறைக்குள் நுழைந்தான். தென்புறத்தில் திதியினும், வடபுறத்தில் துடிச்சாத்தனும், கிழக்குப் புறத்தில் கருங்கைவாணனும் வேட்டுவன் பாறைக்குள் இரவோடு இரவாக மேலேறி வந்தனர். பாறையின் சரிவுப் பகுதியில் பகைவர்கள் வருவதைக் காலம்பனின் மகனான கொற்றன் கண்டான். "இப்படியே சத்தம் போட்டுக்கொண்டு மந்தை நோக்கி ஓடலாமா?" என்று எண்ணியவன், "அப்படிச் செய்தால் எதிரிகள் விழிப்படைந்து விடுவார்கள்" என சிந்தித்தபடியே

மந்தை நோக்கி விரைந்தான். ஒரு நள்ளிரவில் தன் இனமே(திரையர் குலம்) சிறைபிடிக்கப்பட்டது அவனுக்கு நினைவுக்கு வந்தது. மீண்டும் இப்படி ஒரு நிலை ஏற்படக் கூடாது என்று நினைத்து உடனடியாக நீலனிடம் எடுத்துரைத்தான். நீலன் கொற்றன் உள்ளிட்ட வீரர்கள் இரவு என்பதையும் பொருட்படுத்தாது பகைவர்கள் மீது பாறைகளையும் மரக்கட்டைகளையும் உருட்டிவிட்டு தாக்குதலைத் தொடங்கினர். அங்குமிங்கும் மரங்கள் சாய்ந்து கொண்டிருந்ததைக் கண்ட வேந்தர் படையினர் மிரண்டு போனார்கள். தன் மகன் மரணத்திற்குக் காரணம் நீலன் என உணர்ந்த மையூர்கிழார் வஞ்சினம் உரைத்தான். இரவோடு இரவாக இரு படைகளும் கடும் தாக்குதலை நிகழ்த்தின.

கொற்றன் தன் இனம் அழியக் காரணமான திதியனைத் தீப்பந்த ஒளியில் கண்டு அவனைக் கொன்று தானும் வீர மரணம் அடைந்தான். பறம்பு வீரர்கள் தாங்களே வேட்டுவன் பாறையில் உள்ள பாதி குடில்களைத் தீ வைத்து எரித்தனர். உடல் முழுதும் 'தீக்களி பூசி' வேந்தர் படை நோக்கி சீறிப்பாய்ந்தனர். வேந்தர் படையினர் என்ன செய்வது என்று அறியாமல் திகைத்து நின்றனர். தீக்குள் இருந்து தாக்கியும் மீண்டும் தீக்குள் புகுந்தும் நெருப்பால் மாபெரும் அரணை அமைத்தும் போரிட்டனர். "மனித முயற்சிக்கு அப்பாற்பட்ட செயலைப் பறம்பு வீரர்கள் செய்து கொண்டிருந்தனர்" என்று கங்கைவாணன் குழப்பத்தில் வெறிகொண்டு கத்தினான். கண்ணிமைக்கும் நேரத்தில் நீலனால் துடிச்சாத்தனின் தலை துண்டாக்கப்பட்டது. வேந்தர் படையினரும் இணையான தாக்குதலை நிகழ்த்தினர். பறம்பு படையில் எஞ்சியது இரு வீரர்கள் மட்டுமே. வேட்டுவன் பாறையில் காரிக்கொம்பு ஊதப்பட்டதைக் கேட்ட நீலன் மகிழ்ச்சி அடைந்த நேரத்தில் அவனது காலில் ஈட்டி பாய்ந்தது. வைப்பூர் துறைமுகம் தீயினால் எரிந்து போனதற்கு மூல காரணம் நீலன் என்று உணர்ந்த கருங்கைவாணன் அவனைச் சிறை பிடித்துச் சென்றான். நீலன் சிறைபிடிக்கப்பட்டது மூவேந்தர்களுக்கும் பெரும் மகிழ்ச்சியைத் தந்தது. இவ்வாறாக வேள்பாரி புதினத்தில் பகைவர்களால் முற்றுகையிடப்பட்ட தன் மதிலை மதிலுக்குரிய வீரர்கள் உள்ளிருந்து வெளியே இருக்கும் பகைவரோடு போரிட்டு தம் மதிலை காப்பதும், மாற்றரசன் கோட்டையை நாற்புறமும் சூழ்ந்து தன் படைகளுடன் அதனுட் புகுந்து கைப்பற்றுதல் முதலான நொச்சி, உழிஞை தொடர்பான ஒழுக்கங்களும் புதினத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தும்பையும் வாகையும்

'அதிரப் பொருவது தும்பை'(புறம்.வெண்) என்பது இலக்கணம். மண் காரணமாகவும் மதில் காரணமாகவும் நிகழ்ந்த போர்களைத் தொடர்ந்து 'வீரம்' என்பதை மையமாக வைத்து மன்னரும், அவர் படையும் நிகழ்த்தும் போர் முறை 'தும்பைத்திணை' எனப்படும். இப்போர் நிகழும்போது வீரர்கள் தும்பைப் பூவைச் சூடுவர். அதாவது உழிஞை வேந்தனை எதிர்த்துப் போரிடுதல் பற்றிக் கூறுவதாகும். இலக்கியங்களில் பெரிதும் பேசப்படுகின்ற போர் இதுவேயாகும். பெருநில வேந்தன் ஒருவன் தத்தம் வலிமையைக் காட்ட நடத்தும் போர். யானை, குதிரை, தேர், காலாட்படை முதலான படைகளைப் பரந்துபட்ட போர்க்களத்தில் நேருக்கு நேர் நிறுத்தி போரிடுவது தும்பைப் போராகும் என்பதனை தொல்காப்பியர்,

"தும்பை தானே... ...
மைத்து பொருளாக வந்த வேந்தனைச்
சென்று தலை அழிக்கும் சிறப்பிற் றென்ப" (தொல்.புறம்-1017)

என்ற வரிகள் மூலம் குறிப்பிடுகிறார். மேலும் வாகைத் திணையைத் தொல்காப்பியர்,

வாகை தானே... ...
தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப" (தொல்.புறம்-1020)

என்ற வரிகளில் வாகை என்பது போரில் வெற்றி பெற்ற வேந்தனின் வெற்றிச் சிறப்பை எடுத்துக் கூறுகிறார். இத்திணையில் அவர் 18 துறைகளை விளக்கியுள்ளார்.

வேள்பாரியில் தும்பையும் வகையும்

புதினத்தில் "நாகரவண்டினைக் கொத்திக் கொண்டு வந்து விட்டேன்" என்று சொல்லி குலசேகரப் பாண்டியன் தன் மகிழ்வை வெளிப்படுத்தினார். 'நாகர வண்டு' என்று அவர்கள் குறிப்பிட்டது நீலன் எனும் வீரனைத்தான். நீலன் மூஞ்சல் நகரில் சிறை வைக்கப்பட்டான். ஹிப்பாலஸிடம் குலசேகர பாண்டியன் மீண்டும் மீண்டும் "நாகரவண்டினை நமது கூட்டுக்குள்

கொண்டு வந்து விட்டோம். இனி நமக்கான இறை நம்மைத் தேடி வந்தே தீரும். மூவரும் இணைந்து வளைத்து வளைத்து வேட்டையாடுவோம்" என்று சினம் கொண்டான்.

இறுதியில் போர்க்களம் இருவருக்கும் பொதுவான இடத்தில் அமைய வேண்டும் என்றும், விதிகளை உருவாக்கி போர் புரிதல் வேண்டும் என்றும், போர்க்களத்தில் எல்லா விதிகளையும் அறிந்தவர் இரு படைகளுக்கும் வேண்டும் என்பதற்காக 'நிலைமான் கோல்சொல்லிகளை' நியமித்தனர். வேந்தர் படைக்கு நிலைமான் கோல்சொல்லியாக திசைவேழரும், பறம்புபடைக்குக் கபிலரும் நியமிக்கப்பட்டனர். போர் விதிகளை வளவன்காரி படித்து முடித்தான் பல்வேறு சூழ்ச்சிகளுடன் வேந்தர் படையினர் போரிட திட்டம் தீட்டினர்.

தட்டியங்காடு போர்

தட்டியங்காட்டில் போர் மூண்டது. பறம்பு வீரர்கள் முன்னேறிச் சென்று வேந்தர் படையைத் தாக்கினர். தட்டியங்காடு முழுவதும் ஈக்கி மணல் நிறைந்த நிலம் என்பதால் வேந்தர் படையில் குதிரைப்படை, தேர்ப்படை முதல்வனை பெறும் சவால்களைச் சந்தித்தன. முன்னேறி சென்று தாக்க அவர்களால் முடியவில்லை. பல்லாயிரம் வீரர்கள் போர்க்களத்தில் மாண்டு போனார்கள். வேந்தர் படையில் இரு தளபதிகளும், பறம்பில் கூழையன், வேட்டூர் பழையன் முதலானோர் மரணமடைந்தனர். வேந்தர்படையினர் போர் விதிகளை மீறி தாக்குதலைத் தொடுத்தனர். "இன்றைய போரில் நமது படை விதிகளை மீறிவிட்டது" என்று திசைவேழர் கூறியதும் எல்லோரும் அதிர்ச்சி அடைந்தனர். "அப்படி யாரும் விதிகளை மீறவில்லை" என்று பாண்டிய நாட்டுத் தளபதி கருங்கைவாணன் மறுமொழி உரைத்தான். "போர் விதி என்பது தட்டியங்காட்டுக்கு மட்டும்தான் மூஞ்சலுக்கு அல்ல" என்று உரைக்க, சினம் கொண்ட திசைவேழர் விதியைப் போர் முடியும் வரை பின்பற்ற வேண்டும் என்றும், விதியைப் பின்பற்றாத காரணத்தினால்தான் பறம்பு நாட்டின் மாபெரும் வீரரான இரவாதன் மரணம் அடைந்தான் என உரைத்தார்.

இரவாதன் மரணத்தின் எதிரொலியாகத் திசைவேழர் மரணம் அடைந்தார். பாரியும் மற்ற பறம்பு வீரர்களும் ஆவேசம் கொண்டு கொட்டும் மழையில் தீப்பந்தம் ஏந்தி இரவோடு இரவாக மூஞ்சல் நகர் மீது தாக்குதலை நடத்தி வேந்தர் படையை வென்று நீலனை மீட்டனர். ஆறு நாட்களாக நடைபெற்ற இப்போரில் பறம்பு வீர்கள் வெற்றி வாகை சூடினர். மேற்சொன்ன குறிப்புகள் வழியாக புதினத்தில் தும்பைத்திணை தொடர்பான ஒழுக்கங்கள் புனைவாக அழகுடன் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வேள்பாரியில் வாகைத்திணை

வேள்பாரி புதினத்தில் எங்கும் படைவீரர்கள் பூக்களைச் சூடி போர் புரிந்ததாகக் குறிப்புகள் இல்லையென்றாலும் ஓரிடத்தில் வாகைப்பூ பற்றிய குறிப்புகள் இடம்பெறுகிறது. புதினத்தில் பறம்பு நாட்டின் ஒரு பகுதியான வேட்டுவன்பாறையில் நீலனின் மனைவியான மயிலாவுக்கு நிறைசூல் விழா சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மகப்பேறு நிலையில் இருக்கும் பெண்களுக்கு நடக்கும் பெருவிழா என்று அதனைக் கருதுவர். இவ்விழாவின் போது வள்ளிக்கூத்தும் நடைபெறும். ஆண்கள் கலந்துகொள்ள இங்கே அனுமதியில்லை. ஆண்களுக்குத் தெரியாமல் பறம்பு நாட்டில் நடக்கும் ஒரு மர்மவிழா என்றே கூறுவர். படைக்களத்தில் இருந்து மயிலாவைக் காண நீலன் புறப்பட்டான். படைக்களத்தில் பாரி – கபிலர் இடையே நடைபெற்ற உரையாடலின் போது “போரில் அறம் நீண்ட நேரம் உயிர் வாழாது” என்ற கபிலரின் கூற்று நீலனுக்குப் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது. போர் பற்றிய சிந்தனையே மனதில் நெடுநேரம் நினைத்துக்கொண்டிருந்த வேளையில் அவன் வரும் வழியில் திடீரென ஓர் ஓசையை உணர்ந்தான். அதைக் கண்டதும் நீலன் சற்றே வியப்படைந்தான். அவன் பார்த்தது குமரிவாகை மரத்திலிருந்த கருங்கிளியைத்தான். அதைக் கண்டதும் போருக்கான நல்ல நிமித்தமாகவே நீலன் கருதினான். அங்கிருந்த குமரிவாகை மலர்களைப் பறித்துக் கொண்டு வேட்டுவன்பாறைக்குப் புறப்பட்டான். மலர்களால் மயிலா அலங்கரிக்கப்பட்டிருந்தாள். நீலனைக் கண்டதும் பாரியின் மனைவியான ஆதினி “நீ கொண்டுவந்த பூவை இப்போது அவளுக்குச் சூட்டு” என்றதும், நீலன் மறுமொழி சொல்லாமல் மயிலாவையே பார்த்துக் கொண்டிருந்தான். “என்ன பேசாமல் இருக்கிறாய்?” என ஆதினி மீண்டும் கேட்டதற்கு, மயிலாவைப் பார்த்துக் கொண்டே நீலன் “நிறைசூல் பெண்ணின் மலர்ந்த முகத்துக்கு இணையான மலர் இதுவரை கண்டறியப்படவில்லை. நான் எந்தப் பூவைச் சூட்டுவேன்?” என்று உரைத்த

போது, அவன் சொல் கேட்டு ஆதினியில் கண்கள் கலங்கின. நீலனைத் தன் மகன் எனத் தழுவி நெற்றி முகர்ந்து முத்தம் கொடுத்தாள். அப்போதுதான் நீலன் கொண்டு வந்தது குமரிவாகையைக் கவனித்தாள். "வாகைப் பூவையா பறித்து வந்தாய்? வாகை மரம் கொற்றவை குடிகொள்ளும் மரமல்லவா? இந்தப் போர்க்களத்தில் போர் தெய்வத்தின் பூக்கள் உன்னிடமே இருக்கட்டும். அவை உனக்கானவை" என்றாள். எனவே புதினத்தில் ஒரு வீரன் வாகைப்பூ சூடுவது வாகைத்திணையோடு ஒத்திருக்கின்றது.

பாடாண் திணை

"பாடாண் திணை = பாடு + ஆண் + திணை, பாடப்படும் ஆண் மகனின் ஒழுகலாறுகளைப் புகழ்வது, ஒரு மன்னனின் புகழ், வலிமை, கொடை, வீரம், இரக்கம் முதலிய பண்புகளைப் புகழ்ந்து பாடுவது பாடாண் திணை" என்று இலக்கணவாதிகள் விளக்கம் தருகின்றனர்.

"புலவர் பாடும் புகழினை விரும்பிய தலைவர்கள் தம்முடைய அறிவு, திரு, ஆற்றல், ஈகை முதலிய பெருமிதப் பண்புகளை ஆளுதற் தன்மையாகிய ஒழுகலாற்றைக் குறித்து வழங்குவதே பாடாண்" என்று வெள்ளைவாரனர் பொருள் கொள்வார்.

"வெற்றி பெற்றவர்களைப் பாராட்டுவது, புகழ்வது, பரவுவது உலக இயல்பே" என்பது தொல்காப்பியர் கூற்றாகும். மேலும்,

"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு நிறப்பின் முதலான மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே" (தொல். புறம் - 1034)

என்ற நூற்பாவில் பல்வேறு விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன. பொதுவாக வேந்தர்கள் வைத்திருக்கும் கொடிகளின் சிறப்பு, அவர்கள் பகைவரின் மதில்களை அழித்த ஆண்மை, வெற்றியைக் கொண்டாடும் வள்ளிக்கூத்து முதலானவற்றைக் கடவுளோடு சேர்த்துப் பாடப்படுவதாக தொல்காப்பியர் கருத்துக்கிறார்.

வேள்பாரியில் பாடாண்

பாரியின் கருணை உள்ளம்

அழிந்து போன சமூக அமைப்பின் அடையாளமாக இல்லாமல், அழியக்கூடாத மனித பண்பின் பேரடையாளமாக என்றென்றும் பாரி போற்றப்படுகிறான். அதற்குக் காரணம் அவனிடம் உள்ள கருணை உள்ளமும் கொடையும்தான். புதினத்தில் சமதள பரப்பிலிருந்து முதல்முறையாக பாரியைக் காண வேண்டும் என்ற ஆவலோடு கபிலர் பறம்பு மலையின் அடிவாரத்திலிருந்து தன் பயணத்தைத் தொடர்ந்தார். அவ்வாறாக செல்லும் வழியில்தான் பறம்பு நாட்டின் மாபெரும் வீரர்களில் ஒருவனான நீலனைக் கண்டார். நீலன் உதவியோடு பல்வேறு உரையாடல்களுக்கு மத்தியில் பாறைகளையும் குன்றுகளையும் கடந்து சென்றார். இருவரும் வழியில் வேப்பம்பூவினைக் கண்டனர். அதனை கையில் ஏந்திய கபிலர் "வேப்பம்பூ யாருக்கு உரியது தெரியுமா?" என்று நீலனிடம் வினாவை எழுப்பி "பாண்டிய மன்னனுக்கு உரியது" என்று தானே விடை அளித்தார். இதனை கேட்டவுடன் நீலன், வயல் நண்டின் கண்களைப் போலத்தான் வேப்பம்பூ இருக்கும் என்று கூறிய உடன் அதற்கு கபிலர், "வயல் நண்டின் கண்கள் தான் அப்படி இருக்குமா? கடல் நண்டின் கண்கள் அப்படி இருக்காதா?" என்று கேட்டவுடன், நீலன் கபிலரிடம் "கடலை நான் பார்த்ததில்லை" என்று கூறினான். "மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் கடலைப் பார்க்க வேண்டும்" என கபிலர் வினவ, ஏன்? என்று நீலன் மறுமொழி உரைக்க, கபிலர் அதற்கு "அது அவ்வளவு விரிந்த பறந்தது... அளவற்றது" என்று கூறினார். முன்னால் போய்க்கொண்டிருந்த நீலன் சட்டெனத் திரும்பி கபிலரை நேர்கொண்டு பார்த்துக் கேட்டான், "எங்கள் பாரியின் கருணையை விடவா?" என்று கூறியவுடன் கபிலர் தன் மனதுக்குள் சுருங்கிப் போனார். இவ்வாறாகப் புதினத்தின் ஆசிரியர் பாரியின் கருணை உள்ளத்தைக் கடலை விடப் பெரியது என்று கதை மாந்தன் நீலன் மூலமாக எடுத்துக் கூறியுள்ளார்.

கொடைச்சிறப்பு

பாரி மீதான போரைத் தொடங்குவதற்காக மூவேந்தர்களும் முடிவு செய்து போர்ச் சடங்கு நடத்தவும் போருக்கான நாளைக் குறிக்கவும் பாண்டிய நாட்டில் உள்ள வானியல் அறிஞர் திசைவேழரை அழைத்து வந்தனர். பாசறை அமைக்கப்பட்டிருந்த மூஞ்சல் நகருக்கு வருகை தந்த திசைவேழர் "பலி நிலத்துக்குக் குறி சொல்லும் இழிசொல் செய்யேன்" என மனம் கூற

முற்பட்டபோது "போரைத் தவிர்க்க வழியேதும் இல்லையா?" என்று கூறியதும் மூவேந்தர்களும் அதிர்ச்சிக்குள்ளானார்கள். அவையில் அமைதி நீடித்தது. போரைத் துவங்கும் முன் பறம்பு நாட்டில் வசிக்கும் கபிலரிடம் பேச முடிவு செய்து அழைப்பு விடுத்தனர்.

கபிலரும் வருகை தந்தார். அவரிடம் "இப்பெரும்போரால் பாரியும் பறம்பும் அழிவதைத் தவிர்க்கவே நாங்கள் விரும்புகிறோம்" என்ற மூவேந்தர்களின் சொல்லுக்கு "நான் என்ன செய்ய வேண்டும் என்று கருதுகிறீர்கள்" எனக் கபிலர் கேட்டார். "பாரியைச் சமாதானப்படுத்திப் பேரரசுகளோடு இணங்கி போகச் சொல்லுங்கள்" என்று முசுகுந்தர் உரைத்தார். கபிலருக்கும் மூவேந்தர்களுக்கும் இடையே வாக்குவாதம் முற்றியது. வார்த்தைகள் உரசிக்கொள்ளத் தொடங்கின. கொந்தளித்த கபிலர் உணர்வுகளை ஒருமுகப்படுத்தி பேசத் தொடங்கினார். "உங்கள் மூவருக்கும் பறம்பு மலை வேண்டும் அவ்வளவு தானே" என்று கூறியவுடன் சற்றே உயர்த்திய குரலில் சோழவேலன் 'ஆமாம்' என்று சொன்னான். அதற்கு கபிலர் "அதோ அந்த மேடையில் இருக்கும் இரண்டு யாழ்களையும் இருவர் கையில் எடுத்துக் கொள்ளுங்கள். இரண்டு பெண்களை அழைத்து காலில் சலங்கைகளைக் கட்டிக்கொள்ளச் சொல்லுங்கள். அனைவரும் உடன் வாருங்கள். நான் பாடுகிறேன். பாட்டிசைத்து பறம்பேறிய குழுக்கள் கேட்பதை 'இல்லை' என சொல்லும் வழக்கம் பாரியிடம் இல்லை. மொத்த பறம்பினையும் வழங்கிவிடுவான்" என்று பாரியின் கொடைச்சிறப்பை மூவேந்தர்கள் முன்னிலையில் எடுத்துரைத்தார். இதன் மூலம் புதினத்தில் ஒரு மன்னனின் புகழ், கொடை முதலானவற்றை எடுத்துரைப்பது பாடாண் திணையோடு ஒத்திருப்பதைக் காணமுடிகின்றது.

முடிவுரை

புறத்திணைகள் யாவும் போர்ப் பிரிவுகளை விளக்குகின்றன. நிரை கவர்தல் தொடங்கி, பாடாண் திணை வரை ஓர் ஒழுங்கு காணப்படுகிறது. போர் தொடங்கும் போது, பசுக்கூட்டங்களைக் கவர்ந்து வந்து பாதுகாப்பர். பசுக்கூட்டங்களைக் கவர்வதே போருக்கு அடிப்படையாக அமைகிறது. போருக்கு அடிப்படைக் காரணம் உலகப் பொருள்கள் மேல் ஆசையே ஆகும். சங்கப் புற இலக்கியங்கள் புறத்திணைகளையும் அவற்றின் துறைகளையும் அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டுள்ளன. அவ்வகையில் வேள்பாரி புதினத்தில் சொல்லப்பட்ட கதைகள் யாவும் நம் முன்னோர்கள் வகுத்த புறத்திணை இலக்கணத்தோடு ஒழுங்குப்பட பொருந்தி நிற்பதை இக்கட்டுரை வழி அறிய முடிகிறது.

பார்வை நூல்கள்


- வெங்கடேசன்.சு, வீரயுக நாயகன் வேள்பாரி, (2021), விகடன் பிரசுரம், 757, அண்ணா சாலை, சென்னை – 600 002.
- இளம்பூரணனார் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம், (2011), ஜி-4, சாந்தி அடுக்கம், எண்-3, ஸ்ரீ கிருஷ்ணா புரம் தெரு, இராயப்பேட்டை, சென்னை – 600 014.
- முனைவர் கி.இராசா, தொல்காப்பியம்–பொருளதிகாரம், (2007), பாவை பப்ளிகேஷன்ஸ், 142, ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014.
- டாக்டர் எஸ் ஸ்ரீகுமார், தமிழில் திணைக்கோட்பாடு, (2014), நியூ சென்சூரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098.
- துரை.சீனிச்சாமி, திணைக்கோட்பாடு, (2014), நியூ சென்சூரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098.
- புலியூர் கேசிகன் உரை, புறப்பொருள் வெண்பாமாலை, (2009), ஜி-4, சாந்தி அடுக்கம், எண்-3, ஸ்ரீ கிருஷ்ணா புரம் தெரு, இராயப்பேட்டை, சென்னை – 600 014.
- தமிழண்ணல், தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கை, (2012), செல்லப்பா பதிப்பகம், மயூரா வளாகம் 48, தானப்ப முதலி தெரு, மதுரை – 1.
- க.ஜவகர், திணைக்கோட்பாடும் தமிழ்க் கவிதையியலும், காவ்யா பதிப்பகம், 16, 2-ம் குறுக்குத்தெரு, கோடம்பாக்கம், சென்னை – 24.


********* ********* ********** ********* ********* ********** ********** **********